# அன்பியக் கூட்டத்தில் சிலுவைப் பாதை

## அன்பின் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, உமது கல்வாரி பாதையில் எங்கள் அன்பிய குடும்பங்களின் பாதங்களையும் பதிக்கின்றோம்.

***முன்னுரை:***

*நாம் அனைவரும் தினந்தோறும் செல்லும் பாதை ஒன்று உள்ளது. அப்பாதை இன்பமாகவும் இருக்கலாம், துன்பமாகவும் இருக்கலாம், ஏன் இரண்டும் கலந்த நடுநிலையாகவும் இருக்கலாம். எந்தப் பாதையாக இருந்தாலும் சரி, அந்தப் பாதை நம்மை எங்கோ ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்கிறது அல்லவா? ஆனால் அந்த பாதை இறைவனின் அன்பு வழியில் நம்மை அழைத்துச் செல்கிறதா? என்று எண்ணிப் பார்ப்பதே நம் அனைவரின் அன்றாடக் கவனமாக இருத்தல் வேண்டும். நமது எல்லா செயல்களும், எண்ணங்களும், பேசும் சொற்களும், செல்லும் வழிகளும் நம்மை விண்ணக வீட்டிற்கு அழைத்துச் செல்லாது மாறாக, குறிப்பிட்ட சில தூய்மையான அன்புச் செயல்களும், நல்ல வழிகளும் மட்டுமே அழைத்துச் செல்லும்.*

*அந்தக் குறிப்பிட்ட பாதையில் கொஞ்சம் பாரம் இருக்கும் மற்றும் கடினமும் இருக்கும். ஏன், கண்ணீர்கூட இருக்கும். அந்தப் பாதையே இதோ இந்த சிலுவைப்பாதை. இதில் நாம் அனைவரும் தொடர்ந்து பயணம் சென்று கொண்டிருந்தால் இறுதியில் நமக்கு இன்பப் பாதையான மீட்புப் பாதையை அடையலாம். எனவே, இதோ இந்தச் சுமையான பாதையிலே, கல்வாரி அன்பர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடன் இணைந்து நாம் அனைவரும் சேர்ந்து இப்பொழுது இந்த அன்பியக் கூட்டத்தின் வழியாக நமது பாதங்களையும் பதிப்போம் வாருங்கள்.*

**(ஒவ்வொரு ஸ்தலத்தின் இறுதியிலும் கர்த்தர் கற்பித்த செபம், மங்கள வார்த்தை செபம், தமத்திருத்துவ புகழ் ஆகியவற்றைச் சொல்லவும்)**



# முதல் நிலை

## நீதிக்குத் தண்டனை தீர்ப்பு

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குற்றமற்றவர். ஆனால், அநியாயமாகவே தீர்ப்பிடப்பட்டார். எங்கள் கல்வாரி அன்பே, எம் அன்பிய குடும்பங்களில் நாங்கள் யாரையும் தீர்ப்பிடாமலும், யார்மீதும் வீண்பழி சுமத்தாமலும், குடும்பத்திலும், அன்பியத்திலும், பங்கிலும் அனைவர் மீதும் அன்பு செய்து வாழ எங்கள் அன்பியக் குடும்பங்களுக்கு இந்த உம் அருள்வரம்தாரும்.*

***செபம்:*** *ஒ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம்தாரும்.ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



# இரண்டாம் நிலை
## பாரமான சிலுவை சுமத்தப்படுதல்

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாரமானச் சிலுவையை நமது தீயச் செயல்களுக்காகச் சுமக்கிறார். எங்கள் கல்வாரி அன்பே, எம் அன்பிய குடும்பங்களில் நாங்களும் யாருக்கும் பாரமாக இல்லாமல், எம் அனுதின சுமைகளை நாங்களே சுமந்து உம்மைப் பின்பற்றி வாழவும், உம்மைப்போல் பிறரது சுமைகளை நாங்களும் தாங்கவும், கனிவான இதயம் தந்து எம் அன்பியத்தை அர்ச்சித்து, எங்கள் அன்பியக் குடும்பங்களுக்கு இந்த அருள் வரம் தாரும்.*

***செபம்:*** *ஓ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.*
***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



## மூன்றாம் நிலை
### இயேசு முதல் முறையாக தரையில் விழுகிறார்

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமது அனைவர் பாவத்திற்காகவும், முதல் முறையாக தரையில் விழுகின்றார். எங்கள் கல்வாரி அன்பே, எம் அன்பியக் குடும்பங்களில் நாங்களும் பாவத்தில் தவறி விழும் போது உமது அன்பை உணர்ந்து எழவும், பாவத்தில் விழுகின்ற மற்ற அனை வரையும் தாங்கிப் பிடித்து உம் தெய்வீக அன்பை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி திருத்தவும் எங்கள் அன்பியக் குடும்பங்களுக்கு இந்த அருள் வரம் தாரும்.*

***செபம்:*** *ஓ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



## நான்காம் நிலை

### சிலுவை வழியில் இயேசு கிறிஸ்து தன் தாயைச் சந்திக்கிறார்

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் தாய் தூய அன்னை மரியா அவர்களைச் சந்திக்கிறார். ஓர் எளிய பெண்ணாக நாசரேத்தில் வாழ்ந்த அன்னையை முதலில் இயேசு கிறிஸ்து தான் சந்தித்தார். இறுதிவரை அன்புக் காட்டினார். எங்கள் கல்வாரி அன்பே, எம் அன்பியக் குடும்பங்களில் நாங்களும் வயதான எம் பெற்றோர்கள் மற்றும் எல்லா பெரியவர்களையும் அன்பு செய்து, அவர்களுக்கு நல்ல மதிப்பும், மரியாதையும் கொடுத்து உம்மைப்போல் தூய அன்பை அவர்களுக்கு காட்டி வாழ எங்கள் அன்பியக் குடும்பங்களுக்கு இந்த உம் அருள் வரம் தாரும்.*

***செபம்:*** *ஓ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



## ஐந்தாம் நிலை
## சீமோன் தோள் கொடுத்து உதவி புரிகிறார்

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில் :*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சீயோன் என்பவர் உதவி செய்கிறார். எங்கள் கல்வாரி அன்பே! எம் அன்பியக் குடும்பங்களில் சீமோனைப்போல நாங்களும் பிறர் துன்பங்களில் தோள் கொடுக்கவும், அன்பு தேவைப்படுவோருக்கு அன்புக் காட்டவும், அதை உமக்கென உண்மையாக செய்யவும் எங்கள் அன்பியக் குடும்பங்களுக்கும் இந்த உம் அருள் வரம் தாரும்.*

***செபம் :*** *ஓ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாக கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன். ஆமென்.*



## ஆறாம் நிலை

### இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் திருமுகத்தைத் துடைக்கிறார் வீரப்பெண் புனித வெரோணிக்கா

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசுவின் தெய்வீகத் திருமுகத்தை வெரோணிக்கா துடைக்கிறார். எங்கள் கல்வாரி அன்பே வீரப் பெண் புனித வெரோணிக்கா, உம் தெய்வீகத் திருமுகத்தை துடைக்க உம்மைத் தேடி ஓடி வந்ததுபோல, எங்கள் அன்பியத்தின் வழியாக பங்கு ஆலயத்திலும், அன்பியக் கூட்டங்களிலும் நடைபெறும் அனைத்து வழிபாடுகளிலும், செபங்களிலும், நற்செயல்களிலும் கலந்துகொண்டு அதன் வழியாக நாங்களும் உம் கல்வாரித் திருமுகத்தை துடைக்க எங்கள் அன்பியக் குடும்பங்களுக்கும் இந்த அருள் வரம் தாரும்.*

***செபம்:*** *ஓ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



## ஏழாம் நிலை

## இயேசு கிறிஸ்து இரண்டாம் முறையாகக் கீழே விழுகிறார்

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர் :*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையின் பாரத்தால் மீண்டும் கீழே விழுகின்றார். எங்கள் கல்வாரி அன்பே, நாங்கள் மனம் திருந்தாமல் திரும்பத் திரும்ப செய்த பாவங்களுக்காக இப்போதும்கூட நீர் மீண்டும் கீழே விழுகின்றீர். நாங்கள் இனிமேல் பாவம் செய்யாமலும், உம்மை மன நோகச் செய்யாமலும் இருக்க எங்கள் அன்பியக் குடும்பங்களுக்கு உம் அருள் வரம் தாரும்.*

***செபம்:*** *ஒ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக் கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



## எட்டாம் நிலை

### எருசலேம் பெண்களுக்கு இயேசு கிறிஸ்துவின் ஆறுதல் மொழி

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எருசலேம் மகளிர்களுக்கு ஆறுதல் மொழி கூறுகின்றார். எங்கள் கல்வாரி அன்பே, எங்கள் பாவங்களை நாங்கள் நினைத்து வருந்தி மன்னிப்பு கேட்கின்றோம். திருந்தி மீண்டும் புது வாழ்வு பெற்று உம் அறிவுரைப்படி வாழவும், எங்கள் பிள்ளைகள் உம் அருள் பணிக்கும் மற்றும் ஆலய வழிபாடுகளிலும், அன்பியக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு உம் அன்பைச் சுவைக்க எங்கள் அன்பியக் குடும்பங்களுக்கு உம் அருள் வரம் தாரும்.*

***செபம்:*** *ஓ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனு டைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



## ஒன்பதாம் நிலை

### இயேசு கிறிஸ்து மூன்றாம் முறை கீழே விழுகிறார்

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூன்றாம் முறையாக மீண்டும் கீழே விழுகின்றார். எங்கள் கல்வாரி அன்பே, நாங்கள் உமது தெய்வீக அன்பை இழக்கும் அளவுக்கு முழுமையாகப் பாவத்தில் மூழ்கி விட்டோம். எங்கள் பாவ வாழ்க்கைக்காக நீர் எத்தனை முறைதான் வீழ்வீர். எங்களை மன்னியும். எங்களைத் தள்ளி விடாதேயும். எங்கள் பாவ வாழ்வின் இக்கட்டுக்களை உமது வல்லமையால் உடைத்தெறிந்து உம் அன்பில் நிறைந்து நாங்கள் அனைவரும் வாழ, எங்கள் மேல் இரக்கம் வையும். எங்கள் அன்பியக் குடும்பங்களுக்கு உம் அருள் வரம் தாரும்.*

***செபம்:*** *ஓ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற் பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.*



## பத்தாம் நிலை
## இயேசு கிறிஸ்துவின் ஆடைகள் களையப்படுகின்றன

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஆடைகளை களைந்து மிகவும் கொடூரமாக அவமானப்படுத்தப்படுகிறார். எங்கள் கல்வாரி அன்பே! எங்கள் சிந்தனைகளில் உள்ள உலகப்பற்றை அகற்றி, எக்காலமும் உமது கல்வாரி அன்பை மட்டுமே நாடவும், நாங்கள் கவர்ச்சியான உடையை யும், ஆடம்பரமான வாழ்வையும் தவிர்த்து எப்பொழுதும் உம்மைப்போலவே எளிய வாழ்க்கை வாழ்ந்து எங்கள் அன்பியத்தின் வழியாக உமக்கு சான்று பகர எங்கள் அன்பியக் குடும்பங்களுக்கு இந்த உம் அருள் வரம் தாரும்.*

***செபம்:*** *ஒ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாக கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



## பதினோறாம் நிலை

### இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைகிறார்கள்

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உடலில் ஆணிகள் பாய்கின்றன. இரத்தம் வழிந்தோடுகிறது. எங்கள் கல்வாரி அன்பே, எங்கள் அனைவரின் மீட்புக்காக மரணம் வரை கீழ்ப்படிந்தீர். நாங்களும் எங்கள் வாழ்நாளில் உம்மைப்போல் தீய செயல்கள், பொறாமை, சுயநலம், பிறரை பழிவாங்குவது போன்ற ஆணிகளை அகற்றிவிட்டு, அன்பு என்ற புண் ஆற்றும் மருந்தாக எம் அன்பியத்திலும், எம் குடும்பத்திலும் செயல்பட்டு உமது திருவுளப்படி நாங்கள் அனைவரும் நடக்க எங்கள் அன்பியக் குடும்பங்களுக்கு உம் அருள் வரம் தாரும்.*

***செபம்:*** *ஓ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



# பனிரெண்டாம் நிலை

## இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*
*அன்பியப் பொறுப்பாளர்: ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து விண்ணுக்கும், மண்ணுக்கும் இடையே உயிர் விடுகின்றார். எங்கள் கல்வாரி அன்பே, எங்கள் வாழ்வின் இறுதி நேரம்வரை உப்மைப்போல் வாழ்ந்து எங்கள் இதயத் திலும், உதட்டிலும் இயேசு என்ற உம் திருப்பெயர் மட்டும் எப்பொழுதும் இருக் கட்டும். நாங்கள் நல்ல மரணம் அடையவும், எங்கள் அன்பியக் குடும்பங்கள் உமது மறு உலக வாழ்வை மனதில் நிறுத்தி வாழ்ந்திடவும் உம் அருள் தாரும்.*

***செபம்:*** *ஓ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



## பதின்மூன்றாம் நிலை

## இயேசு கிறிஸ்துவின் திருஉடல் தூய அன்னை மாமரி மடியில்

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருஉடல் தூய அன்னை மாமரி மடிமீது கிடத்தப்பட்டது. எங்கள் கல்வாரி அன்பே, உம் தூய தாயைப் போல் எங்கள் அன்பியக் குடும்பங்களில் உள்ள நாங்கள் அனைவரும் எங்கள் தாய், தந்தையையும் உண்மையான அன்பினால் தாங்கி நிற்கவும், முதிர்ந்த வயதில் அவர்களைப் பொறுமையோடு பராமரிக்கவும், எம் உள்ளத்தில் உம் இரக்கத்தை வைத்தருளும். உம் திரு இரத்தத்தால், எம் அன்பிய குடும்பங்களின் உள்ளத்தை தூய்மையாக்க உம் அருள் வரம் தாரும்.*

***செபம்:*** *ஓ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*
***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



## பதிநான்காம் நிலை

### இயேசுவின் உடல் கல்லறையில் அடக்கம்

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*

***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருஉடலைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள். எங்கள் கல்வாரி அன்பே, எங்கள் பாவங்களுக்காக சிலுவை மரணம் ஏற்ற இயேசு கிறிஸ்துவே, நாங்கள் அனைவரும் எங்கள் எல்லாவித பாவங்களையும் புதைத்துவிட்டு, உமது மீட்பின் பலனை எங்கள் அன்பியக் குடும்பங்கள் பெற்று மறு உலக வாழ்வில் உம்மை முழுமுகமாய்க் கண்டு மகிழ உம் அருள் வரம் தாரும்.*

***செபம்:*** *ஓ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் விண்ணகப் பேரின்பத்தில் பங்கு கொள்ள எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் அனைவரின் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



# பதினைந்தாம் நிலை

## இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு

***அன்பியப் பொறுப்பாளர்:*** *திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.*


***அனைவரின் பதில்:*** *அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் எங்களின் பாவங்களுக்காக மரித்து அடக்கம் செய்யப் பட்டு, வெற்றி வீரராக உயிர்த்தீர். எங்கள் கல்வாரி அன்பே, நாங்கள் அனை வரும் உம்மைப் போல் தங்கள் குடும்பத்திலும், அன்பியத்தின் வழியாகவும் உம் தெய்வீக கல்வாரி அன்பிலும், பிறரன்பிலும், நீதி, நேர்மை, மன்னிப்பு, பொறுமை ஆகிய பண்புகளில் நிறைவுடன் வாழ்ந்து மரித்து, உயிர்த்து உம்முடன் வான் வீட்டில் உம் திருமுகத்தரிசனத்தில் தினமும் மகிழ்ந்து வாழ்ந்திருக்க எம் அன்பியக் குடும்பங்களுக்கு உம் அருள் வரம் தாரும்.*

***செபம்:*** *ஓ எம் தூய கல்வாரி அன்பே, நாங்கள் அனைவரும் உமது இந்த நற்பண்புகளை எங்கள் அன்பியத்தின் வழியாகக் கடைபிடித்து வாழ்ந்து, இதன் வழியாக உம்மோடு ஒருநாள் பங்கு கொள்ள விண்ணகப் பேரின்பத்தில் எங்களுக்கு உம் அருள் வரம் தாரும். ஆமென்.*

***அன்பியப் பொறுப்பாளர்:*** *எங்கள் மேல் தயவாயிரும் சுவாமி. தயவாயிரும்.*

***அனைவரின் பதில்:*** *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. ஆமென்.*



**நன்றி :எஸ்.ராபர்ட் , ஆசிரியர், அன்பியம் ஓர் உறவு வாழ்வு**